# මුදල් හා ක්‍රමසම්පාදන අමාත්‍යාංශය
# நிதி, திட்டமிடல் அமைச்சு
# MINISTRY OF FINANCE AND PLANNING

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01. ශ්‍රී ලංකාව.
செயலகம், கொழும்பு 01. இலங்கை
The Secretariat, Colombo 01 Sri Lanka

කාර්යාලය / அலுவலகம் / Office: 2484500, 2484600, 2484700
ෆැක්ස් / பெக்ஸ் / Fax: (94)-11 - 2449823
වෙබ් අඩවිය / வெப் சைட் / Website: www.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல. / My No.: டீடீஐபீ /01/ 2010 (1)
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 2010.12.10


*[ மொழிபெயர்ப்பு ]*

**வியாபார, தீர்வை மற்றும் முதலீட்டுக் கொள்கை இலக்கம்:01/2010**

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள் அனைவருக்கும்,

**சலுகை அடிப்படையிலான மோட்டார் வாகனங்களுக்கான அனுமதிப் பத்திரங்களை வழங்கல்**

அரசாங்க சேவையிலும், மற்றும் அரச பொது தொழில் முயற்சிகளிலும் பணிபுரியும் நிறைவேற்று மட்டங்களில் நிர்வாக, முகாமைத்துவ மற்றும் தொழில் ரீதியான பதவிகளில் ஈடுபட்டுள்ள அலுவலர்களுக்கான, சலுகை அடிப்படையிலான நிபந்தனைகளுக்கு உட்பட்டு, மோட்டார் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு / புதிய பகுதிகள் மற்றும் உதிரிப் பாகங்களை பயன்படுத்தி உள் நாட்டிலேயே உற்பத்தி செய்யப்பட்ட மோட்டார் வாகனங்களை கொள்வனவு செய்வதற்கு அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கான பிரேரணைத் திட்டம் 2010ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 15ஆந்திகதியிலிருந்து அமுலுக்குக் கொண்டு வரப்படும்.

**01. தகைமைகள்**

இப்பிரேரணைத் திட்டத்தின் கீழ் சலுகையைப் பெற்றுக் கொள்ளக் கூடிய அலுவலரின் சேவைக் காலப்பிரிவும் மற்றும் தகைமைகளும் பின்வருமாறு:

(அ) 2006.04.25ஆந் திகதியின் அரச பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 06/2006 இல் குறிப்பிடப்பட்டுள்ள "சிரேஷ்ட மட்டத்துக்கு" உரிய பதவியொன்றைக் கொண்டிருக்கும் அரசாங்க சேவையில் ஆறு வருடங்கள் (06) தொடர்ச்சியாக செயலுறு சேவையைப் பூர்த்தி செய்துள்ள அலுவலர்கள்,

(ஆ) ஆறு வருடங்கள் (06) தொடர்ச்சியாக செயலுறு சேவையைப் பூர்த்தி செய்துள்ள முப்படையின் லுதினன் கர்னல், வின்க் கமாண்டர், கமாண்டர் அல்லது அதிலும் உயர்வான பதவியொன்றில் நிரந்தரமாக்கப்பட்ட அலுவலர்கள் மற்றும் முப்படையின் சேவைக்காக நேரடியாக சேர்த்துக் கொள்ளப்பட்ட ஆறு (06) வருடங்கள் தொடர்ச்சியாக செயலுறு சேவையைப் பூர்த்தி செய்த வைத்தியர்கள், பட்டயப் பொறியியலாளர்கள், பட்டயக் கணக்காளர்கள், பட்டயக் கட்டடக் கலைஞர்கள்,

(இ) இலங்கைப் பாராளுமன்றத்தின் "சிரேஷ்ட மட்டத்துக்கு" உரிய பதவியொன்றை வகிக்கும் ஆறு (06) வருடங்கள் தொடர்ச்சியாக செயலுறு சேவையைப் பூர்த்தி செய்துள்ள அலுவலர்கள்,

(ஈ) அமைச்சரவை தீர்மானம் ஒன்றின் மூலம் அரசாங்க நிறுவனமொன்றில் "சிரேஷ்ட மட்டத்தில்" நிறைவேற்றுப் பதவியொன்றுக்கு நியமிக்கப்பட்டு அப்பதவியில் ஆறு (06) வருடங்கள் தொடர்ச்சியாக அல்லது செயலுறு சேவையைப் பூர்த்தி செய்துள்ள அலுவலர்கள்,

(உ) அரச பல்கலைக்கழகங்களில் பன்னிரெண்டு (12) வருடங்கள் செயலுறு சேவையைப் பூர்த்தி செய்து உறுதிப்படுத்தப்பட்டுள்ள கல்விப்பணியாளர்கள்,

(ஊ) அரச நிறுவனமொன்றில் (அரச வங்கிகள் தவிர) மற்றும் அரச பல்கலைக் கழக கல்வி சாராத பணியில் ஈடுபட்டுள்ள "சிரேஷ்ட மட்ட" பதவியொன்றில் உறுதிப்படுத்தப்பட்ட பன்னிரெண்டு (12) வருடங்கள் செயலுறு சேவையைப் பூர்த்தி செய்துள்ள நிறைவேற்று அலுவலர்கள், பட்டயப் பொறியியலாளர்கள், பட்டயக் கணக்காளர்கள், பட்டயக் கட்டடக் கலைஞர்கள் , சட்டத்தரணிகள்,

(எ) இலங்கை மத்திய வங்கியின் III ஆந் தர அல்லது அதிலும் உயர்வான "சிரேஷ்ட மட்ட" நிறைவேற்றுத் தரத்தின் பதவியொன்றில் பன்னிரெண்டு வருடங்கள் (12) செயலுறு சேவையைப் பூர்த்தி செய்துள்ள நிறைவேற்று அலுவலர்கள் மற்றும் ஒழுங்கு முறைப்படுத்தும் நிறுவனங்களில் "சிரேஷ்ட மட்ட" பதவியொன்றில் பன்னிரெண்டு வருட கால (12) செயலுறு சேவையைப் பூர்த்தி செய்துள்ள நிறைவேற்று அலுவலர்கள்,

(ஏ) அரசாங்கத்தின் விசேட கருத்திட்டங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ள பன்னிரெண்டு (12) வருடங்கள் செயலுறு சேவையைப் பூர்த்தி செய்துள்ள, கருத்திட்டப் பணிப்பாளர்கள், பட்டயப் பொறியியலாளர்கள், பட்டயக் கட்டடக் கலைஞர்கள் மற்றும் சட்டத்தரணிகள்

## 02. நிபந்தனைகளும், நியதிகளும், சலுகைகளும்

### 02.01 நிபந்தனைகளும் நியதிகளும்

(அ) சலுகை அடிப்படையிலான வாகன அனுமதிப் பத்திரம் ஒன்றைப் பெறுக் கொள்ள முன்னர் இப்பிரேரணைத் திட்டத்தின் கீழ் வாகனமொன்றை இறக்குமதி செய்தல்/ கொள்வனவு செய்தல் போன்றவற்றிற்கான சட்ட ரீதியான பிணைப்பொன்றை ஏற்படுத்திக் கொள்ளல்; அதாவது நாணயக் கடிதம் ஒன்றை திறத்தல் அல்லது உள் நாட்டு கம்பனியொன்றுடன் உடன்படிக்கையொன்றை மேற்கொள்ளல் கூடாது.

(ஆ) இப்பிரேரணைத் திட்டத்தின் கீழ் புதிய (Brand New) அல்லது ஒரு வருடத்துக்கு மேல் பயன்படுத்தப்படாத இயைபு முறை குறியீட்டுத் தலைப்பு இலக்கம் (HS Heading) 87.03இற்குள் கொண்டு வரக்கூடிய மோட்டார் வாகனங்களை மாத்திரம் இறக்குமதி அல்லது கொள்வனவு (உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட) செய்ய வேண்டும்.

(இ) இறக்குமதி / கொள்வனவு செய்ய வேண்டிய மோட்டார் வாகனத்தின் பெற்றோல் மற்றும் டீசலுக்கான சிலிண்டரின் உச்ச இயலளவு முறையே 2000 சீசீ மற்றும் 2600 சீசீ ஆகவும், உச்ச க.த.ம. பெறுமதி

(ஏ) வழங்கப்பட்டுள்ள தகவல்கள் தவறானவை என உறுதிப்படுத்தப்பட்டால், இப்பிரேரணைத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் செல்லுபடியற்றதாக்கப்படும்.

02.02. வரிச் சலுகை

| வாகனத்தின் வகையும் மற்றும் சிலிண்டரின் உச்ச இயலளவும் இயைபு முறை குறியீட்டுத் தலைப்பு இலக்கம் | சலுகை அடிப்படையிலான வரி (%) ( செலுத்த வேண்டிய ) |
|---|---|
| 1000 CC | 50 |
| 1000 CC | 55 |
| 1000 CC | 60 |
| 1000 CC | 70 |

03. செயன்முறை

(அ) இப்பிரேரணைத் திட்டத்தின் கீழ் சலுகை அடிப்படையில் மோட்டார் வாகனங்களை இறக்குமதி / கொள்வனவு செய்வதற்கான தகைமைகளைப் பூர்ததி செய்துள்ள அலுவலர்கள் மாத்திரம் இச்சுற்றறிக்கையின் இணைப்பு I கீழ் காட்டப்பட்டுள்ள விண்ணப்பப் பத்திரத்தின் மூலம் வேண்டுகோள் ஒன்றை முன்வைக்க வேண்டும். சலுகை அடிப்படையிலான மோட்டார் வாகன அனுமதிப் பத்திரமானது வழங்கப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டே வழங்கப்படுவதனால், அவ்வாறு வழங்கப்பட்டுள்ள தகவல்களில் நம்பிக்கைத் தன்மை தொடர்பாக உறுதிப்படுத்தப்பட்ட உடனே, அமைச்சின் செயலாளர் / மாகாண சபைகள் மற்றும் பிரதம செயலாளர்களினால் விண்ணப்பப் பத்திரங்கள் தனிப்பட்ட முறையில் சிபாரிசு செய்யப்படல் வேண்டும்.

(ஆ) மேலே குறிப்பிடப்பட்டுள்ள சிபாரினை அடிப்படையாகக் கொண்டு வியாபார, தீர்வை மற்றும் முதலீட்டு கொள்கைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால், சுங்க பணிப்பாளர் நாயகத்துக்கும், மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகத்துக்கும் இறை வரித் திணைக்கள ஆணையாளர் நாயகத்துக்கும் பிரதிகளுடன் சலுகை அடிப்படையிலான மோட்டார் வாகன இறக்குமதி / கொள்வனவு செய்வதற்கான அனுமதிப் பத்திரம் ஒன்று வழங்கப்படும்.

04. ஏனைய விடயங்கள்

(அ) இச்சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்கு விதிகள் தொடர்பான வரைவிலக்கணம் அல்லது நிச்சயமற்ற தன்மைகள் தொடர்பான பிரச்சினைகள் ஏற்பட்டால், அவை தொடர்பாக பரிசீலனை செய்து திறைசேரியின் செயலாளருக்கு சிபாரிசினை வழங்குவதற்காக, திறைசேரி பிரதிச் செயலாளருக்கு (நிர்வாகம்) முன் வைக்கப்படுவதோடு, அது தொடர்பாகவும், அனுமதிப் பத்திரத்தினைப் பெற்றுக்

25,000 அமெரிக்க டொலர்கள் அல்லது அதற்குச் சமனான 15.12.2010 இல் உள்ள நாணய மாற்று விகிதப்படி ஏனைய வெளி நாட்டு நிதி அளவினையும் கொண்டிருக்க வேண்டும்.

(ஈ) பெறுமதி சேர்க்கப்பட்ட வரி, துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்திக் கட்டணம், தேசத்தைக் கட்டியெழுப்பல் வரி மற்றும் உற்பத்தி (விசேட ஒழுங்கு விதிகள்) வரிச் சட்டத்தின் 3ஆவது உறுப்புரையின் கீழ் விதிக்கப்பட்டுள்ள கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ள சலுகை வரி விகிதாசாரம் என்பன அனுமதிப் பத்திரத்தை சொந்தமாக வைத்திருப்பவரினால் செலுத்தப்படல் வேண்டும்.

(உ ) இப்பிரேரணைத் திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட / கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் வாகனங்கள் 3 வருடங்கள் முடியும் வரை வேறு ஒரு தரப்பினருக்கு தரப்பினருக்கு மாற்றப்பட முடியாது.

( ஊ) இப்பிரேரணைத் திட்டத்துக்கு தகைமை பெற முடியாத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

i. இச்சுற்றறிக்கையின் 01 ஆம் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமை உள்ள பதவியொன்றுக்கு அல்லது சிரேஷ்ட மட்டத்திலான சம்பள முறைமையொன்றுக்கு தனிப்பட்ட முறையில் அல்லது மிகை ஊழியர் அடிப்படையில் நியமிக்கப்பட்டு சம்பளமொன்று வழங்கப்பட்டுள்ள அலுவலர்கள்,

ii. விண்ணப்பப் பத்திரத்தை வழங்கும் திகதிக்கு அண்மித்த ஐந்து (05) வருட காலத்துக்குள் எந்தவொரு சலுகை அடிப்படையிலான பிரேரணைத் திட்ட முறைமை ஒன்றின் (வரிச் சலுகை ) கீழ் மோட்டார் வாகனமொன்றை இறக்குமதி செய்த அல்லது உள் நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட மோட்டார் வாகனமொன்றை கொள்வனவு செய்துள்ள அலுவலர்கள்,

iii. சம்பளமற்ற விடுமுறையில் தற்போது விடுவிக்கப்பட்டுள்ள அலுவலர்கள்,

iv. அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றதன் பின்னர் உடன்படிக்கை அடிப்படையில், இச்சுற்றிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள, தகைமை பெற்ற பதவியொன்றுக்கு நியமிக்கப்பட்டுள்ள அலுவலர்கள்,

v. ஏதாவது ஒரு அலுவலருக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணைச் செயன்முறையொன்று ஆரம்பிக்கப்பட்டு தற்போது அச்செயன்முறை முடிவுறுத்தப் படாதிருந்தால் அவ்வாறான அலுவலர்கள்,

(எ) இப்பிரேரணைத் திட்டத்தின் கீழ் தகைமை பெற்ற அலுவலர் ஒருவர் வகிக்கும் பதவிகளின் எண்ணிக்கையைக் கருத்திற் கொள்ளாது, ஒரு வாகனத்தை இறக்குமதி செய்வதற்கு மாத்திரம் உரிமையுண்டு.

கொள்வதற்கான உரிமையைப் பெற்றுக் கொள்வது தொடர்பாகவும் திறைசேரியின் செயலாளரின் தீர்மானமே இறுதித் தீர்மானமாக அமையும்.

(ஆ) இச்சுற்றறிக்கை தொடர்பாக ஏதாவது தெளிவுபடுத்தல்களை மேற்கொள்ள வேண்டிய அவசியமிருப்பின், பின்வரும் தொலைபேசி இலக்கம் அல்லது மின்னஞ்சல் மூலமாக தொடர்பு கொண்டு தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

பணிப்பாளர் நாயகம்
வியாபார, தீர்வை மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம்

தொலைபேசி இலக்கம் 011-2484930
மின்னஞ்சல்: admin@ttipd.treasury.gov.lk

பீ.பீ.ஜயசுந்தர
திறைசேரியின் செயலாளர் மற்றும்
நிதித் திட்டமிடல் அமைச்சின்
செயலாளர்

பிரதிகள்:

1. சனாதிபதி செயலாளர்
2. பிரதமரின் செயலாளர்
3. அமைச்சரவை செயலாளர்
4. கணக்காய்வாளர்
5. பணிப்பாளர் நாயகம், இலங்கை சுங்கத் திணைக்களம்
6. ஆணையாளர் நாயகம், மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம்